குரல்குட்டை ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி.ப.ஆனந்தவேணி அவர்கள்

ந.க.எண்.02/2023 நாள்: 09.10.2023

பொருள்: மனைப்பிரிவு நகர் ஊரமைப்பு துறை - திருப்பூர் மாவட்டம் - உடுமலைப்பேட்டை வட்டாரம் - குரல்குட்டை ஊராட்சி போகிகவுண்டன்தாசர்பட்டி கிராமம்- புல.எண். 24/1B -ல் 2.24 ஏக்கர் (அ) 9069 ச.மீ பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியது - ஊராட்சியில் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்குதல் - சார்பு

பார்வை:
1. நகர ஊரமைப்பு துறை இயக்குநர் திருப்பூர் அவர்களின் இணையதள விண்ணப்ப எண்.TY8RNUAB நாள்: 31.05.2023
2. குரல்குட்டை ஊராட்சி தீர்மான எண். 72 /2023- நாள்: 09.10.2023

பார்வை 1-ல் காண் கடித்தின்படி திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குரல்குட்டை ஊராட்சி, போகிகவுண்டன்தாசர்பட்டி கிராமம்- புல.எண். 24/1B -ல் 2.24 ஏக்கர் (அ) 9069 ச.மீ பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நிபந்தனையின் அடிப்படையில் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் குரல்குட்டை ஊராட்சிக்கு பூங்கா மற்றும் சாலை அமைக்க குரல்குட்டை ஊராட்சி மன்ற தலைவர் பெயரில் கிரைய ஆவண எண் 5202/2023 ன்படி தானக்கிரையம் வழங்கப்பட்டுள்ளது. நகர ஊரமைப்பு துறை இயக்குநர் திருப்பூர் அவர்களின் இணையதள விண்ணப்ப எண். TY8RNUAB நாள்: 31.05.2023 -ன்படி நிபந்தனைக்குட்பட்டு தொழில்நுட்ப வரைபடத்திற்கு பார்வை 2-ல் காண் குரல்குட்டை ஊராட்சி தீர்மான அங்கீகாரத்தின்படி ஊராட்சியின் ஒப்புதல் வழங்கி இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

P. Anandhaveni

தலைவர் / செயல் அலுவலர்
குரல்குட்டை ஊராட்சி
உடுமலைப்பேட்டை

தலைவர்,
குரல்குட்டை ஊராட்சி,
உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம்.

இணைப்பு:
மனைப்பிரிவு நிபந்தனைகள்

நகல்:
1.திரு.S.K.மெய்ஞானமூர்த்தி
5/1333A 2-வது தெரு
காந்தி நகர், 2வது காலனி
உடுமலைப்பேட்டை -642126
2.திரு.சிவக்குமார்
காந்திநகர், உடுமலைப்பேட்டை
3.திரு.ரமேஷ்குமார்

2. நகர ஊரமைப்பு துறை இயக்குநர்,திருப்பூர் மண்டலம்

நிபந்தனைகள்

1. திருப்பூர் நகர ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் ம.வ/ந.ஊ(திமா) வரைபடத்தின்படி எல்லை கற்கள் பராமரிக்கப்பட வேண்டும்.

2. மனைப்பிரிவு உரிமையாளர் குரல்குட்டை ஊராட்சிக்கு அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2007-ன் படி விதி 3-ன்படி பரிசீலனை கட்டணம் ரூ.1000/- மும் வளர்ச்சிக் கட்டணம் ரூ.92730/--(ரூபாய் தொண்ணூற்றி இரண்டாயிரத்தி எழுநூற்றி முப்பது மட்டும்),தெருவிளக்கு முன்னேற்ற கட்டணம் ரூ.225000/- (ரூபாய் இரண்டு இலட்சத்தி இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) ஊராட்சி பொதுநிதியில் வங்கி விரைவாக செலுத்தப்படவேண்டும்.

3. திருப்பூர் நகர ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களின் ம.வ/ந.ஊ(திமா) வரைபடத்தின்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு ஒப்புதலையும் எவ்வித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6X4 அளவிலான நிரந்த தகவல் பலகை மூலம் பொது மக்களின் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.

4. மனுதாரர் குரல்குட்டை ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும், நாளும் மனுதாரருக்கு ஒப்பந்தமான நாளும், எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

P. Anandhaveni

தலைவர்,
குரல்குட்டை ஊராட்சி,
உடுமலைப்பேட்டை ஒன்றியம்.

தலைவர் / செயல் அலுவலர்
குரல்குட்டை ஊராட்சி
உடுமலைப்பேட்டை

தீர்மான நகல்
குரல்குட்டை ஊராட்சி மன்றம்

2023 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 09ஆம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு குரல்குட்டை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற **சாதாரண கூட்டம்** ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.**ஆனந்தவேணி** அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் நிறைவேற்றப்பட்ட தீர்மான விபரம்.

முன்னிலை : திருமதி.**ஆனந்தவேணி** அவர்கள் தலைவர், குரல்குட்டை ஊராட்சி,
வருகை : 9+ 1

எண்	பொருள்	தீர்மானம்
	திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குரல்குட்டை ஊராட்சிக்குட்பட்ட போகிகவுண்டன்தாசர்பட்டி கிராமம் புலஎண்கள். 24/1B -ல் 2.24 ஏக்கர் (அ) 9069 ச.மீ பரப்பளவு இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் நகர ஊரமைப்பு துணை இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆவண இணையதள விண்ணப்ப எண்.TY8RNUAB நாள்: 31.05.2023 ன்படி வழங்கப்பட்டதை அடுத்து (மனைப்பிரிவு ம.வா/ந.ஊ.(திமா) மனைப்பிரிவு நிபந்தனைகளின் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பொதுசாலைகள் மற்றும் ஊராட்சி ஒதுக்கப்பட்ட பொதுஉபயோக இடங்கள் தானமாக பெறப்பட்ட பின்பு ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் அனைத்தும் பெறப்பட்ட பின்பு ஊராட்சி மூலமாக இறுதி ஒப்புதல் வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டல்.	**தீர்மான எண்.** 72 **நாள் :09.10.2023** **அங்கீகரிக்கப்பட்டது.**

P. Anandhaveni

தலைவர்,
குரல்குட்டை ஊராட்சி,
உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம்.



நகர் ஊரமைப்பு துறை(DTCP)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்
குரல்குட்டை ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், குரல்குட்டை ஊராட்சி மற்றும் போகிகவுண்டன்தாசரிபட்டி கிராமம் புல எண்.24/1B2-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.
(திட்டமில்லாபகுதி)

இணையதள விண்ணப்ப எண் TY8RNUAB நாள்-31.05.2023
அளவு 1:600 (1 செ.மீ = 6மீ)
வ

குறிப்பு

மனைப்பிரிவின் பரப்பு	2.24 ஏக்கர் (அ) 9069.00 ச.மீ	
மனைப்பிரிவின் எல்லை		
நிலையிலுள்ள சாலை / அணுகு சாலை		
ஒதுக்கிய மனைகள்	36	

பொது ஒதுக்கீடுகள்
(உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

I. மனைப்பிரிவு சாலை பரப்பு 2697.75ச.மீ

II. பூங்கா

i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு (மனைப்பிரிவின் பரப்பு- மனைப்பிரிவின் சாலை பரப்பு) x10% (9069.00 - 2697.75) x 10% = 637.13 ச.மீ

ii) ஒதுக்கப்பட்ட பூங்கா பரப்பு 637.13ச.மீ (10.00%) (மனுதாரால் உரிய அரசு கணக்குத்தலைப்பில் அரசு வழிகாட்டுமதிப்பீடு தொகை ரூ.82189/- நாள்.25.06.2023 அன்று செலுத்தப்பட்டுள்ளது)

III. பொது உபயோகம் (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பில் சாலை பரப்பு நீங்கலாக%)

A) LOCALBODY -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு :(9069.00 - 2697.75 x 0.5% = 31.86 ச.மீ(0.50%)
ஒப்படைக்கப்பட்ட பரப்பு :48.01ச.மீ (0.75%)

B) TANGEDCO -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு :(9069.00 - 2697.75) x 0.5% = 31.86 ச.மீ(0.50%)
ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 68.20ச.மீ (1.07%)

மூலை முடக்கு :
12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ -ம் விடப்படல் வேண்டும்
12.0மீ மேல் உள்ள சாலைகளுக்கு 4.5மீ x 4.5மீ -ம் விடப்படல் வேண்டும்

கட்டிட வரம்பு
9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ விடப்படல் வேண்டும்
9.0மீ -க்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ விடப்படல் வேண்டும்

நிபந்தனைகள் :

1. அரசாணை எண் 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள் 04.02.2019 மற்றும் அரசாணை எண் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள் 31.01.2020-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்
2. அரசாணை எண் 181 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020 மற்றும் அரசாணை எண் 141 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 16.07.2022-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி, மேல்நிலை நீர்தேக்கத்தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்கு வசதிகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் எந்தத்துறையாலும் நிலஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்
5. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வலுவலக நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் மற்றும் விடுதலின்றி நுழைவாயிலில் 0.6 x 1.2மீ அளவிலான நிரந்திர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்
8. உத்தேச மனைப்பிரிவு இடத்தின் ஊடே செல்லும் குறைந்த அழுத்த மின்கம்பிபாதையினை சாலையின் போக்கிற்கு ஏற்ப மனுதாரர் தனது சொந்த செலவில் மாற்றி அமைக்கப்படல் வேண்டும்

SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO. 189/2023

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்

ரா.மணிவேல்
அளவர் / உதவி வரைவாளர்

க.பத்மா
மேற்பார்வையாளர்